**பாடம் 2**

# பார்க்கிறேன், பிடிக்கிறது, எடுக்கிறேன்



**மனன வசனம்**

**முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாய் இருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான். மத்தேயு 13:22.**

**ஆராய்ச்சிக்கு**

**2கொரி 8:1-7; மத்தேயு 13:3-7,22; ஆதி 3:1-6; ஏசாயா 56:11; மத் 26:14-16; 2பேதுரு 1:5-9.**

ஜனவரி 6 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

பணஆசையும் பொருளாசையும் பல கோணங்களில் நம்மைத் தாக்கலாம். லௌகீகக் கண்ணிகளால் நம்மை மயக்கிப் பிடிப்பதற்கு, தன் ஆட்களோடு சேர்ந்து சாத்தான் சதித்திட்டம் தீட்டி, பின்வருமாறு சொல்வதாக எலன் ஒய்ட் விவரிக்கிறார்: ''நிலம் பணம் பெருத்தவர்களின் மனதை உலகக் கவலைகளால் நிறையுங்கள். அவர்கள் தங்கள் பொக்கிஷத்தை பூமியில் சேர்க்க வேண்டும்; உலகக் காரியங்களில் பற்று வைக்கவேண்டும்; அதற்கேற்றவாறு உலகத்தை அவர்களுக்குக் கவர்ச்சியாகக் காட்டுங்கள். தேவனுக்காக ஊழியம் செய்கிறவர்கள் நமக்கு எதிராகச் செயல்படுவதற்குத் தேவையான பணம் கிடைக்காதபடி தடுக்க நம்மால் முடிந்ததை எல்லாம் செய்யவேண்டும். பணம் நம் மக்கள் கையில்தான் இருக்கவேண்டும். அவர்கள் கையில் பணம் கிடைத்தால், நம்மவர்களை நம்மிடமிருந்து பறித்து நம் ராஜ்யத்திற்குப் பாதிப்பை உண்டாக்கிவிடுவார்கள். நாம் வெறுக்கிற சத்தியங்கள் பரவக்கூடாது; கிறிஸ்துவின் ராஜ்யம் வளரக்கூடாது; அதற்காக, அவர்கள் அதிகமாக நேரம் பணக்கவலையிலேயே இருக்கச் செய்யுங்கள்; அப்போதுதான் அவர்கள் செல்வாக்கு குறித்து நாம் பயப்படத் தேவையிருக்காது; சுயநலமும் பேராசையும் உள்ள ஒவ்வொருவரும் நம் வல்லமையில் அகப்படுவார்கள்; இறுதியாக தேவனுடைய மக்கள் மத்தியிலிருந்து விலகிவிடுவார்கள்.'' – *Counsels on Stewardship, pp. 154, 155.*

இந்தச் சதித்திட்டத்திற்கு மக்கள் பலியாவதுதான் வருத்தகரமானது. இத்தகைய ஆபத்துகள் குறித்தும், இந்த ஆவிக்குரிய கண்ணியிலிருந்து தப்புகிறவிதம் குறித்தும் தேவ வார்த்தை சொல்கிறதைப் பார்ப்போம்.

2017, ஜனவரி 13 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

'உங்களை ஆசீர்வதிப்பதே தேவனுக்குப் பிரியம்; நீங்கள் பெற்றிருக்கும் பொருட்கள்தாம் அதற்குச் சாட்சி' என்று பிரசித்திப்பெற்ற பிரசங்கியார் ஒருவர் தொலைக்காட்சியில் பிரசங்கம்செய்கிறார். உண்மையுள்ளவர்களை தேவன் ஐசுவரியவான்களாக்குவார் என்பதே அவரது வாதம்.

இதுபோன்ற தவறான உபதேசம்தான் வளமைவாழ்வுச் சுவிசேஷம். அதாவது, தேவனைப் பின்பற்றினால், இவ்வுலகப் பொருட்களால் உங்களை ஆசீர்வதிப்பார் என்று சொல்வதுதான் வளமைவாழ்வுச் சுவிசேஷம். இது லௌகீகத்தை நியாயப்படுத்துகிற செயலாகும். லௌகீகமாக வாழ்ந்தாலும், குற்ற உணர்வு இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்கவேண்டுமா? 'சுவிசேஷம்' அதற்கு உதவும் என்று மறைமுகமாகச் சொல்கிறார்கள்.

சுவிசேஷம் நிச்சயம் ஐசுவரியத்தை அள்ளித்தரும் என்பது கவனச்சிதறல் காட்சியாகும். வேதாகமம் சொல்வதிற்கு புறம்பான ஒரு நம்பிக்கையை இது உருவாக்குகிறது; சுயச்சார்பு இறையியலைப் பிரதிபலிக்கிறது; வேதாமகச் சாயம் பூசப்பட்ட அரைகுறைச் சத்தியமாகவும் இருக்கிறது. சுயஇச்சையும் அதை நிறைவேற்றுவதுமே எல்லாப் பாவத்திற்கும் அடிப்படை என்றால், அதன் உறைவிடமாக இந்தக் கருத்து உள்ளது.

தேவனுக்குக் கொடுக்கும்போது அவர் திரும்ப உலகப்பொருட்களால் ஆசீர்வதிக்கிறார் என்று வளமைவாழ்வுச் சுவிசேஷம் போதிக்கிறது. இவ்வாறு தேவனை ஒரு வியாபார இயந்திரமாக்கி, 'நான் இப்படிச் செய்தால், திரும்ப எனக்கு இப்படிச் செய்வதாக வாக்குரைத்திருக்கிறீர்' என்று பேரம்பேசுகிற உறவை அவரோடு ஏற்படுத்துகிறோம். அவருக்கு எதையாவது கொடுக்கும்போது திரும்ப என்ன கிடைக்கும் எனும் எதிர்பார்ப்போடு கொடுக்கிறோமே தவிர, அது நம் கடமை என்பதால் கொடுப்பதில்லை. இதுவே வளமைவாழ்வுச் சுவிசேஷம்.

***2கொரி 8:1-7 சொல்கிற சம்பவம் என்ன? இது எவ்வாறு வளமை வாழ்வுச் சுவிசேஷத்திற்கு எதிரானதாக இருக்கிறது? தர்மகாரியம் என்று பவுல் சொல்வதின் அர்த்தம் என்ன? 2கொரி 8:7.***

அந்த மக்கள் 'கொடிய தரித்திரமுடையவர்களாக' இருந்தார்கள்; ஆனாலும், தங்கள் திராணிக்கும்மேலாக மிகுந்த உதாரத்துவமாகக் கொடுத்தார்கள். 2கொரி 8:2. தேவனுக்குமுன் செம்மையானவர்களாக வாழ்கிறவர்களாக இருந்தால், அவர்கள் உலகப்பொருட்களை அமோகமாகப் பெற்றிருப்பார்கள்; அதுவே அதற்கு ஆதாரம் என்று சொல்கிற வளமைவாழ்வுச்சுவிசேஷத்தை தவறென நிரூபிப்பதற்கு இதுபோன்ற அநேக வசனங்கள் உதவுகின்றன.

தேவனுக்கு உண்மையாக இருப்பவர்கள் உலகப்பொருட்களில் தரித்திரராகவும், தேவனுக்கு உண்மையாக இல்லாதவர்கள் உலகப்பொருட்களில் ஐசுவரியவான்களாகவும் இருக்கிறார்கள்; அதற்குச் சில உதாரணங்களைக் கூறுங்கள். தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு அடையாளம் நாம் பெற்றிருக்கும் உலகப்பொருட்கள்தாம் என்பது தவறானது என்பதை இதிலிருந்து எவ்வாறு அறியலாம்?

இவ்வாழ்க்கைகுறித்த கவலைகளும் இவ்வுலக ஐசுவரியங்களும் தற்காலிக மானவையே; வேதாகமத்திலிருந்துதான் இதை அறியவேண்டும் என்பதில்லை. 'காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிறோம். காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்திய மானவைகள்.' 2 கொரி 4:17,18. கிறிஸ்தவர்கள் பரலோகப் பாதையைப் பார்க்கா மல் இவ்வுலகக் கவலைகளிலேயே மூழ்கும்போது, அவர்களுடைய பார்வை கிட்டப்பார்வையாகி விடுகிறது. ஐசுவரியத்தின் வஞ்சனையைப்போல அந்தப் பாதையை அதிகம் மறைப்பது வேறு எதுவும் இருக்காது. கண்பார்வையற்றவரான ஹெலன் கெல்லர், "பார்வையிருந்தும் பார்க்கமுடியாவதவர்தான் உலகத்திலேயே மிகவும் பரிதாபத்திற்குரியவர்கள்" என்று சொன்னார். பார்வையிருந்தும் ஆவிக் குரிய குருடர்களாக இருந்த பலரை வேதாகமத்தில் காணலாம்.

"சத்தியத்தின்மேல் இருக்கவேண்டிய அன்பைப் போக்குமளவிற்கு இவ் வுலகத்தை சிலர் நேசித்துவிடுகிறார்கள். இங்கு அவர்களுடைய பொக்கிஷங்கள் பெருகப்பெருக, பரலோகப் பொக்கிஷத்தின்மேலுள்ள ஆர்வம் குறைகிறது. இங்கு அதிகம் சேர்க்கச்சேர்க்க, தங்களுக்குப் பிரியமான அந்த உடைமைகள் தங்களை விட்டுப் போய்விடுமோ என்று பயப்படுபட்டு, அவற்றை இறுகப் பிடித்துக்கொள் கிறார்கள். எவ்வளவு அதிகம் பெற்றிருக்கிறார்களோ அவ்வளவுக்குக் குறை வாகவே பிறருக்குக் கொடுக்கிறார்கள்; ஏனென்றால், நிறையப்பெற்றிருந்தும் தங்களை தரித்திரராகவே எண்ணுகிறார்கள். ஓ, ஐசுவரியத்தின் வஞ்சனை எவ்வளவு பெரிது! தேவனுடைய ஊழியத் தேவைகளை அவர்கள் பார்க்கவும் உணரவும் மாட்டேன் என்கிறார்களே." - *EGW, 2Spiritual Gifts, p 267.*

ஆவிக்குரிய பார்வை மங்கும்போது, நித்திய இரட்சிப்பு கேள்விக்குரியதாகி விடுகிறது. இயேசு நம் பார்வையில் தென்பட்டால்மட்டும் போதாது; அவரையே இலக்காக வைத்துப் பார்க்கவேண்டும்.

***மத் 13:3-7,22 வசனங்களில் எதைக்குறித்து இயேசு எச்சரிக்கிறார்? ஏழையானாலும், பணக் காரனானாலும் இந்தக் கண்ணியில் சிக்குவது எவ்வாறு எளிது?***

**முதலாவது,** உலகக்கவலைபற்றி இயேசு எச்சரிக்கிறார். மத் 13:22. பணக் கவலை உட்பட பல கவலைகள் நமக்கு உண்டாவதை இயேசு அறிவார். ஏழை களுக்கு தங்களிடம் இல்லையே என்கிற கவலை; பணக்காரர்களுக்கு தங்களுக்கு இன்னும் வேண்டுமே என்கிற கவலை. இத்தகைய கவலைகள் நம் வாழ்க்கையில் சத்தியத்தை 'நெருக்கிப்போடாமல்' நாம் பார்த்துக்கொள்ளவேண்டும். மத் 13:22.

**இரண்டாவது,** ஐசுவரியத்தின் மயக்கம்குறித்து இயேசு எச்சரிக்கிறார். மத் 13:22. ஐசுவரியம் தன்னில்தானே தீமையானது அல்ல; ஆனாலும் நம்மை வஞ் சித்து, நித்திய அழிவுக்குள் நம்மைத் தள்ளுகிற ஆற்றலும் அதற்கு உள்ளது.

உங்கள் வாழ்க்கையில் ஐசுவரியத்தின் மயக்கத்தை என்னென்ன வழிகளில் எல்லாம் அனுபவித்திருக்கிறீர்கள்? இந்த வஞ்சனையிலிருந்து தப்பித்துக்கொள்ள அனுதினமும் எப்படிப்பட்ட தீர்மானங்களை நீங்கள் செய்யலாம்?

மற்ற பாவங்களைப்போல பணஆசையும் இருதயத்தில்தான் ஆரம்பமாகிறது. உள்ளே உருவாகி, செயலில் வெளிப்படும். ஏதேனில் இதுதான் நடந்தது.

***ஏவாளை வசப்படுத்துவதற்கு சாத்தான் செய்தது என்ன? ஆதி 3:1-6. சாத்தான் நம்மையும் ஏமாற்றுவதற்கு எவ்வாறு இதே நியதிகளை காலம்நெடுகிலும் பயன்படுத்தி வருகிறான்?***

'அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத்தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.' ஆதியாகமம் 3:6.

விளம்பர நிறுவனங்கள் தங்கள் பொருட்களை விற்பனைசெய்வதற்கு ஏதேன் சம்பவத்தில் இருந்துதான் பாடம் படித்திருக்கவேண்டும். "ஏவாள் தன்னிடம்இருந்தவற்றைவிட்டுவிட்டு, தன்னிடம்இல்லாதஒன்றைவிரும்பவேண்டும்; தனக்கு உண்மையிலேயே தேவையற்ற ஒன்று தனக்குத் தேவையென நினைக்கவேண்டும்." இதுதான் சாத்தானின் திட்டம். அதற்காக அவளுக்குள் ஆவலைத் தூண்டிவிடுகிற விதத்தில் விலக்கப்பட்ட அக்கனியை ஏவாளிடம் வர்ணித்தான். எவ்வளவு சாமர்த்தியசாலி! பொருளாசையின் கண்ணியில் சிக்குவதற்குமுன் கடக்கவேண்டிய மூன்று படிகளை அவளது விழுகை விவரிக்கிறது. அவை **பார்ப்பது, பிடிப்பது, எடுத்துக்கொள்வது** என்பவையே.

பொருளாசை மறைந்திருக்கிற பாவம். இச்சையைப் போல, இதுவும் மாம்சத்திற்குள் திரையிட்டு வீற்றிருக்கிறது. ஆனால், இதன் விளைவு வெளிப்பட ஆரம்பிக்கும்போது பயங்கரமாயிருக்கும். உறவுகளைத் துண்டிக்கும், பிரியமானவர்களின் உள்ளங்களில் வடுக்களை உண்டாக்கும், பிறகு நம்மைக் குற்ற உணர்வால் வாதிக்கும்.

பண ஆசை வந்தால், எந்தக் கொள்கையையும் அது தூக்கிச் சாப்பிட்டுவிடும். நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை ஆகாப் ராஜா பார்த்தான்; அதன்மேல் ஆசைப்பட்டான்; நாபோத்தைக் கொன்று அவன் மனைவி அதைப் பெற்றுத்தரும் வரையிலும் அவனால் அமைதியாக இருக்கமுடியவில்லை. 1இராஜா 21. சால்வையையும் பணத்தையும் கண்டபோது, ஆகானால் ஆசையை அடக்கமுடியவில்லை; எனவே அவற்றை இச்சித்து, எடுத்துக்கொண்டான். யோசுவா 7:20-22. சுயநலத்தின் மற்றொரு உருவம்தான் பொருளாசையாகும்.

'பாவத்தின் அதிகளவு வெளிப்பாடு சுயநலம் என்றால், சுயநலத்தின் அதிகளவு வெளிப்பாடு பொருளாசையாகும். கடைசி நாட்களின் 'கொடிய காலங்கள்' பற்றி விவரிக்கும்போது, அப்போஸ்தலனாகிய பவுல் இதைதான் வலியுறுத்துகிறார் 2தீமோ 3:1. சகல தீமைகளுக்கும் வேராக சுயநலம் இருக்குமென்றும், அது முதலில் பொருளாசை எனும் கனியைக் கொடுக்கும் என்றும் சுட்டிக்காட்டுகிறார். 2தீமோ 3:2.' - *John Harris, Mammon (New York: Lane & Scott, 1849), p. 52.*

பொருளாசைக்கு ஏதுவான தன்மை ஏதாவது நம்மிடம் காணப்படுகிறதா என்பதை ஆராய்ந்து பாருங்கள்; இவ்வாறு ஆராய்வது ஏன் முக்கியமானதாகும்?

## பேராசை – நம் விருப்பப்படிச் செய்தல்

புதன்
ஜனவரி 10

*எந்தப் பாவத்தை பற்றி ஏசாயா 56:11 எச்சரிக்கிறது?*

---

நாம் விழுந்துபோனவர்கள்; நம் சுவாசம்போல பேராசையும் நம்மில் கலந்து விடுகிறது. அது இயல்பாகவே நம்மில் உருவாகக்கூடியது. கிறிஸ்துவின் குணத்திற்கு எதிர்மாறான ஒன்று இருக்குமானால், அது பேராசையாகத்தான் இருக்கமுடியும். 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே.' 2கொரி 8:9.

வரலாற்றில் பேராசையால் உண்டான பேரழிவுகளை ஆண்டவர்மட்டுமே அறிவார். பேராசையால் போர்கள் உருவாகியிருக்கின்றன. மக்கள் தங்களையும் தங்கள் குடும்பங்களையும் அழிக்கும்விதத்தில் பேராசை அவர்களைக் குற்றஞ் செய்ய வைத்திருக்கிறது. பேராசை ஒரு வைரஸ் போன்றது; அது ஒருவருக்குள் சென்று, நற்குணங்களை எல்லாம் ஒன்றொன்றாகப் பட்சித்துப்போட்டு, கொடும் பேராசைக்காரராக மாற்றுகிறது. உணர்ச்சியார்வத்திற்கும், பதவி ஆசைக்கும், பொருளாசைக்கும் தீனிதேடும் ஒரு வியாதிதான் பேராசை. மீண்டும், **நான் பார்க்கிறேன், பிடிக்கிறது, எடுக்கிறேன்** என்பதே காரணமாக இருக்கிறது.

*பேராசை எவ்வளவு கொடியது என்பது பற்றி மத் 26:14-16இல் நாம் என்ன அறிந்துகொள்ளலாம்?*

---

"நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள்" என்று யூதாஸ் கேட்கிறான். மத் 26:15. பேராசை எல்லாவற்றையும் அடிபணிய வைத்துவிடும்! வரலாற்றில் ஒரு சிலருக்கே கிடைத்திருந்த ஒரு பாக்கியத்தைப் பெற்றிருந்தவன் யூதாஸ்; மனிதனாக வந்த இயேசுவோடு வாழ்ந்தான்; அவருடைய அற்புதங்களைக் கண்டான்; அவர் பிரசங்கித்த ஜீவ வார்த்தைகளைக் கேட்டான். ஆனாலும், பேராசையும் பொருளாசையும் அவனை எப்படியொரு நிலைக்குக் கொண்டுசென்றுவிட்டன!

"தம்மைக் காட்டிக்கொடுக்க இருந்தவனை எவ்வளவு கனிவுடன் இரட்சகர் நடத்தினார்! பொருளாசையின் வேரை அறுக்கும் தயாளக் குணக்கொள்கைகள் பற்றிஇயேசுதம்பிரசங்கத்தில்போதித்தார். யூதாஸ்இருந்தசமயத்தில்,பேராசையின் கொடுந்தன்மைபற்றி பலமுறை இயேசு பேசியிருக்கிறார்; இயேசு தன்னுடைய குணத்தைப்பற்றித்தான் கூறுகிறார் என்பதும், தன்னுடைய பாவத்தைத்தான் சுட்டிக்காட்டுகிறார் என்பதும் பல சமயங்களில் அந்தச் சீடனுக்கும் புரிந்தது; ஆனாலும், தன்னுடைய பாவத்தை அறிக்கையிடவோ, தன் அநீதியான போக்கை நிறுத்தவோ அந்தச் சீடன் விரும்பவில்லை." – *EGW, DA, p 295.*

---

கவனமாக இல்லாவிட்டால், பேராசை யாருக்குள்ளும் எழும்பலாம் அல்லவா? தேவனுடைய கிருபையின்மூலம் இந்த இயல்பான போக்கை நாம் எவ்வாறு கட்டுப்பாட்டிற்குள் வைக்கமுடியும்?

## சுயக் கட்டுப்பாடு

**பின்வரும் வசனங்களை வாசியுங்கள். பேராசையும் பொருளாசையும் பணஆசையும் கிறிஸ் தவர்களுக்கு என்னென்ன ஆபத்துகளை உண்டாக்கமுடியுமோ அவற்றிலிருந்து ஏழையானாலும் பணக்காரனானாலும் தப்பித்துக்கொள்வதற்கு அவ்வசனங்கள் சொல்கிற என்னென்ன விஷயங் கள் உதவியாக இருக்கும்?**

*அப் 24:24-26*________________________________________________

__________________________________________________________

*கலா 5:22-25*________________________________________________

__________________________________________________________

*2பேதுரு 1:5-9*________________________________________________

__________________________________________________________

நாம் இப்படித்தான் வாழவேண்டும் என்று தேவன் கொடுக்கிற பல கட்டளைகள் இந்த வசனங்களில் உள்ளன. சுயக்கட்டுப்பாடு எனும் அடிப்படை அம்சத்தை அவை வலியுறுத்துகின்றன. பேராசையும் பொருளாசையும் பணஆசையும் இருக்கிற இடத்தில் சுயக்கட்டுப்பாடு தள்ளியே நிற்கும். முதலில் நம் எண்ணங்களிலும், பிறகு நம் செயல்களிலும் சுயக்கட்டுப்பாடு வேண்டும்; அப்போதுதான் பேராசையிலும் பொருளாசையிலும் பணஆசையிலும் இருந்து தப்பமுடியும்.

நாம் எவ்வளவு தூரம் தேவவல்லமைக்கு நம்மை அர்ப்பணிக்கிறோமோ, அந்த அளவுக்குத்தான் நம்மில் சுயக்கட்டுப்பாடு காணப்படும். பல காலம் நாம் தீனிபோட்டு வளர்த்துவந்த இந்த தன்மைகளை நாமே தோற்கடிப்பது இயலாத காரியம். சக்திவாய்ந்த இந்த வஞ்சனைகளிலிருந்து நமக்கு வெற்றி தேவையானால், பரிசுத்த ஆவியானவர் நம்மில் விசேஷமாகக் கிரியைசெய்ய வேண்டியது அவசியம். ‘மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லமால் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.’ 1கொரி 10:13.

நாம் எப்படிப்பட்ட பாதையைக் கண்டடையவேண்டும் என்று 2பேதுரு 1:5–9இல் பேதுரு கூறுகிறார்? அந்தப் பாதைக்குச் செல்வதற்கான படிகள் யாவை? பேராசைக்கும் பொருளாசைக்கும் எதிராகப் போராடுவதற்கு, அந்தப் படிகளில் ஏறிச்செல்ல நாம் என்ன செய்யலாம்?

__________________________________________________________

__________________________________________________________

மனரம்மியமாக, சந்தோஷத்தோடு வாழவேண்டும் என்பதே வாழ்க்கையின் இலக்கு. லௌகீகத்தில்தான் தன்னிறைவு இருப்பதாக நினைத்தால், இந்த இலக்கை எட்டமுடியாது. இது உண்மை என்று தெரிந்தும்கூட, 'பார்க்கிறேன், பிடிக்கிறது, எடுக்கிறேன்' என்கிற போதையில்தான் மக்கள் மிதக்கிறார்கள். மற்றவர்கள்போல செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகளும் லௌகீகத்தில்தான் உயர்வு இருப்பதுபோல நினைக்கத் தூண்டடப்படுகிறார்கள். ஆனால், பொருட்களை விடாமல் சேர்ப்பதால் மகிழ்ச்சியும், மனநிறைவும், போதுமென்கிற மனநிலையும் வரப்போவதில்லை. மாறாக, அந்தப் பணக்கார வாலிபன் இயேசுவைவிட்டு கவலையோடும் மன வருத்தத்தோடும் சஞ்சலத்தோடும் சென்றதுபோல ஆகிவிடும்; ஏனென்றால், அந்த வாலிபன் கேட்க நினைத்ததும், பெற விரும்பியதும் அவனுக்குக் கிடைக்கவில்லை. 'பொருளாசை சம்பந்தப்பட்ட விஷயங்கள் மக்களின் வாழ்க்கையை கீழ்நோக்கிப் புரட்டிப்போடுகின்றன; கீழ்த்தரமான மனநிறைவு மற்றும் சந்தோஷத்திலிருந்து மனஅழுத்தத்திற்கும் பதட்டத்திற்கும், அதைத் தொடர்ந்து தலைவலி போன்ற உடற் கோளாறுகளுக்கும், ஆளுமைக்கோளாறுகளுக்கும், சுயநாட்டக் கோளாறுக்கும், சமூக விரோத நடத்தைக்கும் வழிநடத்துகின்றன.' - *Tim Kasser, The High Price of Materialism, p. 22.*

அதாவது, லௌகீகக் கிறிஸ்தவர்கள் ஐசுவரியம் எனும் கிணற்றில் பருகினாலும், ஆவிக்குரிய நிலையில் வறண்டவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்து கொடுக்கும் தண்ணீரைப் பருகினால் ஒருபோதும் தாகம் உண்டாகாது. யோவான் 4:14.

# கலந்துரையாடக் கேள்வி

1. *வளமை வாழ்வுச் சுவிசேஷத்தை ஆதரிப்போர் எந்த வசனங்களை சாதகமாகக் காட்டுகிறார்கள்? இத்தகைய பொய்ப்போதகத்தை மறுக்கும் விதத்தில் வாழ்ந்த சிலர்பற்றி வேதாகமத்திலிருந்து கூறுங்கள்?*

2. *தனக்கு முதல் பிள்ளை பிறந்து ஒரு சில வருடங்கள் கழித்து ஒருவர் இப்படிச் சொன்னார்: இந்தப் பிள்ளையிடமிருந்து நான் இரண்டு முக்கிய வேத உண்மைகளைக் கற்றுக்கொண்டேன். முதலாவது, நாம் பாவிகளாகவே பிறக்கிறோம். இரண்டாவது, நாம் பேராசை உள்ளவர்களாகவே பிறக்கிறோம். இயற்கையிலேயே நாம் பேராசை உள்ளவர்கள் என்பதை பிள்ளைகளிடம் எவ்வாறு காணமுடிகிறது? நமக்குத் தேவகிருபை அவசியம் என்பதுபற்றி இதிலிருந்து என்ன தெரிகிறது?*

3. *''போதைப்பழக்கத்திற்கு அடிமையானவர்களைவிட, அறியாமையும் பேராசையும் பதவி ஆசையுமுள்ள நபர்களால்தான் அதிக இக்கட்டுகள் வரும்'' என்று ஒருவர் எழுதினார். பேராசையானது பேராசை உள்ளவரை மட்டுமல்ல, அவரைச் சுற்றியுள்ளோரையும் பாதிக்கிறது. பேராசைக்காரரான ஒருவரால் அவரைச் சுற்றியிருந்த அனைவரும் பாதிக்கப்பட்ட சம்பவம் ஏதாவது உங்களுக்குத் தெரியுமா?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள்.

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*